# The Journal of
# The Tanjore Maharaja Serfoji's
# Sarasvati Mahal Library


EDITED BY

N. KANDASWAMY PILLAI,

*Honorary Secretary,*

*T. M. S. S. M. Library, Thanjavur.*



Vol. XXIV

No. 3

PUBLISHED ON BEHALF OF
THE ADMINISTRATIVE COMMITTEE OF THE LIBRARY

A. D. 1971 Saka 1893

Annual Subscription Rs. 4.

The following back numbers of the Journal of The Tanjore Maharaja Serfoji's Sarasvati Mahal Library are available for sale :—

| | | | | |
|---|---|---|---|---|
| Vol. | X | Number 1, 2 & 3 | Price Rs. | 4—00 |
| „ | XI | „ „ | ... „ | 4—00 |
| „ | XII | „ „ | ... „ | 4—00 |
| „ | XIII | „ „ | ... „ | 4—00 |
| „ | XIV | „ „ | ... „ | 4—00 |
| „ | XV | „ „ | ... „ | 4—00 |
| „ | XVI | „ 1 & 2 | ... „ | 4—00 |
| „ | XVIII | „ 1, 2 & 3 | ... „ | 4—00 |
| „ | XIX | „ „ | ... „ | 4—00 |
| „ | XX | „ „ | ... „ | 4—00 |
| „ | XXI | „ „ | ... „ | 4—00 |
| „ | XXII | „ „ | ... „ | 4—00 |
| „ | XXIII | „ „ | ... „ | 4—00 |

*(Postage Extra)*

Two copies of each book have to be sent for review in the Journal. Articles published in this Journal can be reproduced with the permission of the Editor. All communications regarding the Journal may be addressed to:—

THE EDITOR,
The Journal of the T. M. S. S. M. Library,
THANJAVUR, Tamil Nadu. (India)

# The Journal of
# The Tanjore Maharaja Serfoji's
# Sarasvati Mahal Library


EDITED BY

N. KANDASWAMY PILLAI,

*Honorary Secretary,*

*T. M. S. S. M. Library, Thanjavur.*



Vol. XXIV

No. 3

PUBLISHED ON BEHALF OF

THE ADMINISTRATIVE COMMITTEE OF THE LIBRARY

A. D. 1971

Śaka 1893

Annual Subscription Rs. 4.

# CONTENTS


| | | | Page |
|---|---|---|---|
| 1 | Editorial | ... | i—ii |
| 2 | சரப புராணம் <br> —V. Chockalingam, Vidvan, Tamil Pandit, Sarasvati Mahal Library. | ... | 17—32 |
| 3 | சிவபாரத சரித்திரம் <br> —M. Seeralan, Assistant Librarian, Sarasvati Mahal Library. | ... | 1—12 |
| 4 | குழந்தை பராமரிப்பு <br> Title page & Introduction | | i—iv |
| | Text (completed) <br> —C. Rajarajesvara Sarma, Ayuevda Siromani, Junior Research officer, L. R. U., Sarasvati Mahal Library. | ... | 18—24 |
| 5 | नीलकण्ठकुलालवरचरित्र- श्रीशरमेन्द्र विरचित <br> —T. R. Bhima Rao, Marathi Pandit, Sarasvati Mahal Library. | ... | 1—11 |
| 6 | नीलभिल्लचरित्र— श्रीशरमेन्द्रविरचित <br> —T. R. Bhima Rao | ... | 12—16 |
| 7 | पूर्वमीमांसागुच्छः-विधिविचारः (Completed) <br> —N. S. Devanathachariar, Siromani, Sanskrit Pandit, Sarasvati Mahal Library. | ... | 29—32 |
| 8 | ,, —गुणविधिः <br> —N. S. Devanathachariar, Siromani, | | 1—6 |
| 9 | सिद्धान्तचन्द्रिका सव्याख्या (Completed) <br> —P. M. Padmanabha Sarma, Siromani, Sanskrit Pandit, Sarasvati Mahal Library. | ... | 33—36 |
| 10 | ज्ञानांकुशः - सव्याख्यः <br> —P. M. Padmanabha Sarma, Siromani. | ... | 1—8 |
| 11 | नञ्शिरोमणिटीका ( नञर्थवादः ) (Completed) <br> —N. K. Ramanuja Tatachariar, Siromani, Sanskrit Pandit, Sarasvati Mahal Library. | ... | 9—15 |
| 12 | आख्यातवादटिप्पणम् <br> —N. K. Ramanuja Tatachariar, Siromani, | ... | 16—20 |
| 13 | From our Visitors' Book | | i—vi |
| 14 | Our Exchanges. | | i—ii |

The Journal of
The Tanjore Maharaja Serfoji's Sarasvati Mahal Library

Vol XXIV A. D. 1971 Śaka 1893 No. 3

# EDITORIAL

The twenty-fourth volume of our Journal comes to a close with this issue and we are placing before the readers our usual multi-lingual treat in Tamil, Sanskrit, and Marathi for their kind appreciation and enjoyment.

In our Tamil Section the epic poem of *Sarabha Purāṇa*, edited by our Tamil Pandit, Vidvān, Chockalingam is continued and, being a long composition, as epics generally are, it will be continued in some more issues. This is followed by a new serial work in prose, *Śivabhāratam*, contributed by our Assistant Librarian, Thiru M. Seeralan. It is a rendering in a popular, and often colloquial, prose style of the story of famous Śivāji, the great founder of the Marathi Dynasty, as narrated by the poet Paramānanda Kavi in his original Sanskrit poem in epic style, under the same title.

*Kaumārabhṛtya* or *Kuzhandai Parāmarippu*, a small treatise dealing with the care of the child, consisting of original Sanskrit verses from ancient classics of Āyurveda with explanations in Tamil, contributed by Vaidya Viśārada C. Rajarajeswara Sarma is concluded in this issue provided with introduction and title page.

The two short pieces in Marathi which follow are both by Maharajah Serfoji II, the great Scholar King in whose illustrious name this Library stands. They bear eloquent testimony to the successful absorption of the Tamil culture into the Marathi Literature brought about the Kings of the Marathi Dynasty of Tanjore, especially by Raja Serfoji. The first of these, *Nīlakaṇṭha kulāla Caritra* which is published completely, is a musical exposition of the story of one of the sixty-four Saiva saints of Tamil Nadu reputed as Tirunīlakaṇṭha Nāyanār, who was

potter by birth and profession, and attained the highest level of spiritual glory by his devotion to Lord Śiva. The other one, which is just begun, is entitled *Nilabhilla Caritra* and deals with the story of another great devotee of Śiva, named Kaṇṇappa Nāyanār. We put forward these two specimens of the synthesis of Tamil and Marathi cultures as an example to show how far Literature can serve as a medium of linguistic harmony and national integration.

In the Sanskrit section, Pandit N. S. Devanathachariar continues his boquet of monographs on topics Mīmāmsa. *Vidhi vicāra* is carried on from the last issue and completed here. It is followed up with another tract called *Guṇavidhi* which contains a highly interesting and polemical discussion on the *prose* and *cons* of the interpretation of the word *Soma* in the Vedic injunction '*Somena Yajeta*', establishing the conclusion that the term connotes the material *Soma* offered as oblation in the sacrifice and not the name of the sacrifice. The Advaita treatise, *Siddhānta Candrikā* of Rāmānanda Sarasvati with the commentary of Gaṅgādhara Sarasvati, edited by Pandit, P. M. Padmanabha Sarma is completed in this issue and the same editor has contributed another short exposition of Advaita named *Jñānānkuśa* with a commentary. The author of the treatise has explained the purport of the work as providing the reader with *Jñānā*, or spiritual knowledge as an *Aṅkuśa* or goad with which the wandering wild elephant, namely the mind, may be brought under control. After completing *Naňśiromaṇi* ṭika of Raghudeva, which deals with the diversity of negative connotations, Pandit N. K. Ramanuja Tata-chariar, is adding another treatise to his series, namely *Ākhyāta tippaṇam* by the same author, Raghudeva. This is a small commentary on that portion of Raghunatha's great work on Nyāya, *Didhiti*, which deals with Ākhyāta, or the import of the verbal inflections in the Vedic injunctions prescribing the sacrifices.

This issue comes to a close with the usual extract from our Visitors' Book, which will present to the readers a periodical picture of Sarasvati Mahal as the numerous visitors see it.

Thanjavur
3—6—1971

N. KANDASWAMY,
*Honorary Secretary.*

ஆல முண்டருள் கண்(டமு ம)ணிபுய நான்கும்
மாலை மார்பமும் நிததிலத் தொடைகளும் வாய்ப்பக்
கோல வெம்பொறிப் புலியதள் குலவிய மருங்குங்
கால னுயிரைய(ச் சா)டிய கழல்களு மிலங்க ௧௩

தொழுந்த கைத்தம ணியக்கிரி துதைந்திரு பால்வீழ்ந்
தெழுந்த வெண்முகிற் றிரளெனத் தவர்க ளிர(ட்)டச்
செழுந்த டத்திரைக் கங்கையுந் தங்கிய திங்கட்
கொழுந்தும் வேணியும் பணியவ ரறிவெலாம் கொள்ள. ௧௪

தோற்ற ருஞ்சுட ராதபர் சோதிக ள(ா)லுக
மாற்ற ருங்கதிர் தயங்கிட மடங்கலா சனமேற்
சாற்ற ருந்தவத் தணிமலை மடந்தையுந் தானும்
வீற்றி ருந்தன னுலகெலா மளித்தருள் விமலன். ௧௫

வேறு

விண்ட யங்குநதி யாள னின்னன
வியந்திருந் தருளும் வேலையின்
முண்ட கம்பயிலு நான்முகக் கடவுள்
மூவர்முப் பதின்மர் தேவருங்
கண்ட (தன்மைய லா)றவிர்ந் தருந்துயர்
கலக்க வாவிகள் கலங்கிவந்
தண்ட மெங்கணு மளிக்கு நாதனுரை
யணிகொ ளாலய மருங்கரோ. ௧௬

வி(ரிந்த வேணி)யர் முரிந்த பூணினர்
விழுந்த மாலைய ரெழுந்துநீர்
சொரிந்த கண்ணின ரொழிந்த மாயையர்
துளங்கு மேனிய ரடர்ந்துமுன்
சரிந்த தானையர் மருண்ட (விழியினர்)
தளர்ந்த வாசக [1] ருரந்திறம்
பரிந்த செங்கையர் மயங்கு நீர்மையர்
பயந்த நெஞ்சினர் நெருங்கினார். ௧௭

ஆதி நாத முறையோ வனைத்தையு
ம(ளந்த நாத மு)றையோவருட்
போத நாத முறையோ யகண்டித
புராண நாத முறையோமலைப்

1. ருத்திறம் எனல் பொருந்தும்.

பேதை நாத முறையோ வடங்கரிய
பேத நாத முறையோவென
வேத நான்(கெ)னும் வாசவா திபரும்
வெருவி யோல மிடும்வேலையின். ௧௭

கொற்ற முற்றபுய நாலு மிக்கவொளி
கொண்ட முக்கணரு ணேயமுந்
துற்ற செஞ்சுடர்க ளஞ்ச விஞ்சியெழு
சோதி வீசுதிரு மேனியுங்
கற்றை வேணியு மணிப்பி ரம்புசுரி
கையுமெழிற் கரமும் மருவமுன்
னற்ற வத்திறை வனருள் பெறும்பெரிய
நந்தியெந் தலைவன் வந்தனன். ௧௮

வந்த நந்திபதம் வான நாடர்கள்
வணங்க வந்தவரை யஞ்சலென்
றெந்தைதன் றிருமு னெய்தி நேயமிகு
விருகை வாயிசம் புதைத்துநின்
றந்த மாமலர் விரிஞ்சன் வாசவ
னணைத்துவா னவரு மச்சமே
லுந்த வந்துமுறை யிட்டுநின் றனர்க
ளொளிர்மணிக் கடையி னென்றலும் ௧௯

இறைவனன் னவரை யிங்ஙனங் கொணர்தி
யென்று வாய்மலர் வெய்திமுன்
முறையி டுங்கமல ஞன்முகா திபரை
முத்தி நாதன்(வா) வருளினன்
குறைவொ ழிந்தகளி வய்மி னென்றினிது
கூற வானவர்க ளனைவரு
நிறைவு கொண்டதுயர் விண்டுமா மகிழ்வு
நீடி னுருற நெருங்கினர். ௨௰

தடைபெறும் பெரிய வாயில் பற்பல
தணர்ந்துசென் றருண பணர்ந்துதம்
முடையநா யகனை யுற்றவர்க் குதவு
மொருபரம் பொருளை யெதிர்பணிந்
திடர கன்று கடவுள ருடன்கமல
விறைவன் வாய்மொழி கடவுளர்முன்

புடவி மீதுற வணங்கி நின்றுமறை
புகழ்வ போலினிது புகழுவான். ௨௦

வேறு

பொருமா றெதிரா வருகா லன்விழப்
பொருதா ளிறைவா சரணஞ் சரணம்
திருமா மறையிற் பயனு னவுருத்
திரமந் திரமெய் யுருவாய் சரண
மருளால் முழுதும் பயில்வாய் சரண
மரனே சிவசங் கரனே சரணங்
கருணை லயனே சரணஞ் சரணங்
கயிலைக் கிரியாய் சரணஞ் சரணம். ௨௧

தொடியார் கொடுமைக் கிடியா யடருங்
கொடியா யிடபக் கொடியாய் சரணம்
பொடியா (டிய)மெய் வடிவா நெடுமால்
புணர்மா மிகையைக் களைவாய் சரண
முடியா யடியார் புகலே சரணம்
முதிராய் பழையாய் புதியாய் சரணங்
கடியா ரிதழித் தொடையாய் சரணங்
கயிலைக் கிரியாய் சரணஞ் சரணம். ௨௨

உணர்வற் றுலையுந் தமியற் கருளா
லுணர்வைத் தருதே சிகனே சரணங்
குணமற் றொளிர்வா யனைவற் குநலங்
குறையா தருளே புரிவாய் சரணம்
டணமெய்ச் சுடிகைப் பணியாய் சரணம்
பரனே சிவமந் திரனே சரணம்
கணமேத் துணையத் துணையும் பரவுங்
கயிலைக் கிரியாய் சரணஞ் சரணம். ௨௩

ஒளிர்சிற் பரதற் பரவைந் தொழிலா
மொழியா வினையா டலினுய் சரணங்
கிளியொத் தனநீ யுணர்வித் துணருங்
கிழமைக் கடியந் துணைநீ சரணம்
பளிதக் களபப் புளகக் கடினப்
டணைமா முலையாள் கணவா சரணம்
களியற் றமனத் துறைவாய் சரணங்
கயிலைக் கிரியாய் சரணஞ் சரணம், ௨௪

அக்கா பரனு விமையோன் றிடில்யா
மழிவந் தமியந் துணைவா சரண
மெக்கா லமுநீ யிமையா யெனில்யா
மிறவே மிறவே மிறைவா சரணம்
முக்கா லமும்வென் றருள்வாய் சரணம்
முனியா யுகவாய் புரமோ தியடுங்
கைக்கார் முகனே சரணஞ் சரணங்
கயிலைக் கிரியாய் சரணஞ் சரணம். ௨௫

சகலா கமமுந் தருவாய் சரணஞ்
சதுமா மறைநா லருள்வாய் சரணம்
அகலாய் புணராய் நிறைவாய் சரணம்
அறிவுக் கறிவா பனகா சரணம்
பகலா யிரவா யிரவும் பகலும்
படரா தொளிருஞ் சுடரே சரணங்
ககனு திபர்கா யகனே சரணங்
கயிலைக் கிரியாய் சரணஞ் சரணம். ௨௬

பொய்ம்மா யைத்தவிர்த் தருள்வாய் சரணம்
புகலற் றவர்தம் புகலே சரணம்
எம்மா னெனயா மடையா விடமுண்
டிடரைக் களைவாய் சரணஞ் சரணம்
அம்மா நிலமு மிம்மா நிலமும்
அழியா வகையின் றருள்வாய் சரணம்
கைம்மா றுணர்வாய் சரணஞ் சரணம்
கயிலைக் கிரியாய் சரணஞ் சரணம். ௨௭

துன்றுங் கருணைக் கடலே சரணஞ்
சுருதிப் பொருளே சரணம் புவனம்
பொன்னுஞ் சுடலைக் களமீ திடம்
புரியுங் கரியீ ருரியாய் சரணம்
ஒன்றும் (ப)லவுந் திகழ்பே ருருவா
யுலகங் களளித் தருள்வாய் சரணம்
என்றின் னனபன் னினர்முன் பணிவா
ரெழுவார் தொழுவா ரிவைகூ றினரால். ௨௮

வளையா ழியினு னரகே சரியாம்
வடிவா லுலகம் பதினு லினையுங்

களைவா ளிணையா மிகமேல் கொடுமோ
கரியா விறுதிக் கனல்போல் வெகுளா
திளையா தடலா லுடையா யடியே
மியல்புஞ் செயலுந் திறலுங் குலையத்
தளரா விரைவின் கணடைந் தனைநின்
சரணன் றியுமே(ா) ரரண்வே றுளதோ ! [illegible]

கரைகா ணரிதாம் வலியுந் திறலுங்
கதமுங் கொலையும் மதமுந் தவிரா
வரமா னரகோ ளரியா லுலகம்
மடியா வகையின் றடிகேள் கனலைப்
புரையா வெழுமங் கவனா ருயிரைப்
பொன்றும் படிகண் டருள்செய் யெனநின்
றுரையா நிலமீ துபணிந் தனரா
லுயர்நான் முகனா தியரும் பர்களும். [illegible]

கலகத் திறமா னரகோ ளரிதன்
கதவெங் கனல்கொண் டுகடிந் திடலா
லலையுற் றிமையோர் முறையிட் டிறைபா
லடைவுற் றதறிந் ததறைந் தனமால்
சலசத் தவனா ரணன்வா சவனைத்
தக்கன் றலையோ டுதகர்த் தருளா
லுலகத் திலிடுக் கணொழித் தருளு
மொருவீ ரனெழுச் சியுரைத் திடுவாம். [illegible]

கடவுளர் முறையிடு சருக்கம் முற்றும்.

ஆகத் திருவிருத்தம் 115.

## 3. வீரபத்திரன் எழுச்சிச் சருக்கம்.

வேதா முதலா கியதே வரெலாம்
வெருவ வுரைசெய் தலும்வீ டரிதாய்
நாதா திபரா திபரா பரனா
ரூபே தபுரா தனனா ருயிருக்
காதா ரகிரா திரனா திபரைக்
கருளுங் கருணா லயனன் புடையோர்

சாதா ரணன்வா னவர்நா யகனெந்
தலைவன் புனிதன் புவனந் தருவோன். ௪

உவமிக் கரிதா னபரம் பரனெம்
முயிருக் குயிரா யுறைசங் கரன்மெய்த்
தவமிக் கவர்தங் குணமுஞ் செயலுந்
தானு கிவிளங் குசதா சிவனிப்
புவனத் திடரைப் புரியுங் கொடுமைப்
பெருமா னரகோ ளரிமீ துறையுஞ்
சிவசத் திதனைக் கவர்வா னளிகூர்
திருவுள் ளநினைத் தருள்செய் தருள்வோன். ௫

நவமிக் கபயந் தருதன் னுருவா
ஞானு திபனைத் திறல்நா யகனைப்
புவனத் துணையைக் கருதா தவரைப்
பொருதா விகவர்ந் தபுரா தனனைத்
தவமிக் கவரத் தெதிர்தக் கன்மகத்
தழலும் தலையுஞ் சயமுஞ் சிதைவித்
துவமிக் கரிதா மடலுற் றெழில்கூ
ரொருவீ ரனையுள் நின்றுன் னுதலும். ௬

மறைமுந் தியதக் கன்மகப் பகைஞன்
மதர்க்க டல்நீர் விடமுண் ட(ன)னெம்
மிறைதன் றிருவுள் ளமுணர்ந் துலகத்
திடர்தீர் தருமா றெழுவா னெழுமுன்
கறைகொண் டவிழிக் கனல்குஞ் சியெயிற்
றுயர்பா ரிடமுங் கழுதுங் கணமு
மறைகொண் டமுழக் கமிகக் கடைநா
ளலைவா ருதிபோ லவெழுந் தனவால். ௭

எரிபங் கியவா யெரிகண் ணினவா
யிருள்வென் றிலகுங் கரிமே னியவாய்
முரியும் பிறைவைத் தவெயிற் றினவாய்
முதிர்மா ருதிநேர் கதிகூர் வனவாய்
விரியுங் கதிர்மூ விலைவே லினவாய்
விடவெம் பணிநா ணினவாய் மறமே
புரியந் தகரெண் ணிலருண் டெனமுன்
போதுங் கொடுமைப் பூதம் பலவால். ௮

மழையிற் சிகரம் பலவெற் றிடலால்
    மழைமா முகில்மேல் நிலவுந் தகையா
விலகத் தலமெங் குமுலா வரலா
    லெழுமோ தமுழக் கமெழுப் பிடலா
லுலவற் றழியா வலியால் மெலியோ
    தொளிகூர் தருநன் னிறமுற் றிடலா
லலைவற் றதிறத் தனிலச் செயல்போ
    லடல்கொண் டெழுபூ தரளப் பிலவால். ௬

வளர்வெங் கதமா மடவா ளலமும்
    வளைவா லெயிறு மினைவெண் பிறையுங்
கிளர்வெந் தொழிலா மெழுவெங் கடுவுங்
    கிடையா வலிவன் புயமா மலையுந்
தளர்வன் றெழுவெண் ணகையா மெலியுஞ்
    சயமா முயர்வுஞ் சாருஞ் செயலா
லுளமுன் னரிதா மெறிவா ருதிபோ
    லுலவும் பலபூ தமுலப் பிலவால். ௭

செங்கண் பணிமா மணிசேர் முழையே
    செம்பங் கினைத் தீபத் தருவே
துங்கந் தருவா லெயிறவ் வையினிற்
    றேகை வாள்வயிர்ச் சுடரே யடலிற்
பொங்கும் புயமச் சிகரத் திரளே
    புயனிற் பயிலெற் பணிமா லிகைமின்
றங்கும் மருவிக் குழுவே வடிவாந்
    தடமால் வரையே சிலபா ரிடமே. ௮

முன்னற் சயிலம் பலவா ரியெடா
    மொய்ம்புந் தியவெம் பணியிற் பிணியாப்
பின்னிற் றொடைபோ லுரமீ திலிடும்
    பெருமைக் குறளித் திறள்பற் பலவாற்
பொன்னற் கிரிநேர் வரையெண் ணிலவின்
    போர்கட் டிகல்மற் புடமீ தெதிரிட்
டுன்னற் கருவெண் டுகளாய் விழுவித்
    திடிபோ னகைசெய் வனபற் பலவால். ௯

வாசந் தருகற் பகநா டணையா
    மதிமே னடவா வுடுமே லணுகா

வீசுங் கதிரா தவனைக் குறுகா
வேகத் தொடுடா தலமீ திலுறு
தேசுற் றவிமா னமிசைக் கதுவாத்
திசையெண் சயிலத் திசையா விசையிற்
கூசும் படிவா னுலகம் பரவுங்
குறளித் திரளோ வளவற் றனவால். ௰

வேறு

விளையும் வெஞ்சின மேலிட வெண்மதிப்
பிளவு போல வெயிறு பிறங்கவான்
கிளரு மாருயிர் மேனி கிடைத்தல்போ
லளவில் கோடி யலகை யெழுந்தவால். ௧௧

ஆனை மாமுகத் தண்ணல் கயமுகத்
தான வன்றனைச் சாடி யழித்தநா
ளூனு மேதையு மோடு முதிரமு
நான லம்பெற வுண்டல் நவிலுமால். ௧௨

தார காதி சலதி யலறிடச்
சூர ஞுவி சுடர்பிற கீய்ந்தநாட்
பார வெம்பசி தீரப் பலவிதத்
தார வுண்டன மென்ப வளவில. ௧௩

முக்கண் வீரன் முனிந்து [1] வியந்ததவத்
தக்கன் மாமகந் தன்னை யழித்தநா
ளுக்க வானவர் தந்தசை யுண்டது
மக்க ளத்தி லடலும் புகலுமால். ௧௪

நரம்பு மென்பு நயந்து சமைத்ததோர்
குரம்பை யன்ன விளங்கிய கோலத்த
வரம்பின் மால்வரை சாய வடகிரி
உரந்து ளங்கி விடும்பே ருயிர்ப்பின். ௧௫

தேவர் வான விமானத் திரளுட
னூவ வென்ன வலைப்பன கோடிகள்
பூவு ளானுல கத்தினிற் போய்வன்
காவ லுள்ள கலக்குவ கோடிகள். ௧௬

குன்ற மீது முழையிரு குன்றிபோற்
கன்றி யுட்குழி கண்ணின் மணியென(த்)

---

1. வியத்தகத் எனல் பொருந்தும்

துன்று தேவர் விமானந் துகள்பட
நின்று வெட்டி நிலவு மெயிற்றின ௯௮

வேலை யேழுங் குடிப்பினும் வேலைசூழ்
ஞால முள்ள நுகரினு மாளறு
கால வூழிக் கனலுந்தம் முந்தியின்
பாலு தித்த தென்னவெம் பசியின. ௯௯

கிட்டிப் பார்ப்பக் கிரிகளைத் தோளொடு
மட்டுப் பார்ப்பன வானைச் சிரத்தினால்
முட்டிப் பார்ப்பன மூதண்டத் தப்புறத்
தெட்டிப் பார்ப்பன நகைப்பன வெண்ணில. ௧௦௦

வேறு

கரைய திர்ந்திட நடவி மேல்வரு
தந்திமா முகரும்
வரைக ளெண்ணில கந்து கங்கொள்
மடங்கலா னனரும்
வரமி குந்திடு நரம டங்கலின்
வதனமுற் றவரும்
பரவி யெங்கணு நிறைய வந்தனர்
பலகணு திபரால். ௧௦௧

மிகைத்த தக்கன் மகத்து வீரன்
விளிந்துவெண் மதியைத்
துகைத்த நாளிடைச் சிதறு சந்திர
துண்டமே லணிவார்
பகைத்த வாதவர் பற்கள் கோவை
படுத்திமார் பகமேற்
ற(ை)கக்கு லாவிய முத்த மாலிகைத்
தானெனு வணிவார். ௧௦௨

சங்கு கன்ன ரெனுங்க ணேசர்
பறித்ததண் டுளவச்
செங்கண் மாலுயர் தலைம யிர்த்திரள்
செறிமயிற் கயிறே
பொங்கு நூலென மார்ப மீது
புனைந்துலா வருவா
ரங்கு நாரண னன்ற யர்ந்த
வயர்ச்சியைப் பகர்வார். ௧௦௩

ஆல கால மெழுந்த நாளரி
யயனொடண் டரெலா
மோல மென்றுடை யானை நர்டின
ரோடுநா ளில்விழு
மாலை வெண்குடை துவச மார
மதாணியா திகலன்
கோல மாமு டிப்பல புனைந்தடல்
கொண்டுமேல் வருவார். உங

இறந்த நாரணர் சங்க மெண்ணில
வினிதெடுத் தடலே
யறைந்து நாத மெழுப்பி யண்ட
மதிர்ப்பரா மொருபாற்
றுறந்த வாருயிர் நான்மு கேசர்
துறந்ததா மரையின்
முறிந்த ஞர்ள மடர்ந்த காள
முழக்குவா ரொருபால். உச

பொறிப்பொ குட்டலர் கமல யோனிகள்
போன்றுநாள் கவருஞ்
செறித்த குண்டிகை குடமு ழாவொலி
செய்வரா மொருபாற்
குறித்த நாளற மாளு மிந்திரர்
குஞ்சரக் கிரியின்
முறித்த கொம்பர் புழைப்ப டுத்தி
முழக்குவா ரொருபால். உ●

அரிமி கைத்தன ஞேம றைத்துறை
யயன்மிகைத் தனஞே
பெரிய விப்பு வனங்க ளுக்கிடர்
பெரிதினெய் தியதோ
வெரியு ருத்தென வீர னின்றெழ
வேதுகா ரணமென்
றுரிய தத்த மினத்தோ டங்ங
னுரைத்துமேல் வருவார். உகு

பெருங்க டற்றிரை வெள்ளம் வந்தழி
பெரியவண் டமுகட்

டிரும்பு ழைக்கண் டந்து சென்றுட
னெய்தியக் கடல்வாய்
நெருங்கு பற்பல வண்ட மெங்கு
நிகழ்ந்தசெய் கையெலாந்
திருந்த வுற்ற கணங்க டன்னொடு
செப்புவார் பலரால். உஎ

அண்ட மீது புழைக்க ணெய்தி
யதிர்த்துலா வருவர்
ரண்ட கோடி கள்பல மிதந்திடு
மாழிமூழ் கிடுவா
ரண்ட மொன்றுட னென்றெ றிந்தினி
தாடியோ டிடுவா
ரண்ட நாயகன் வீர பத்திர
னடல்புகழ்ந் திடுவார். உஅ

வேறு

இப்படிக் கணங்கள் பூதவே தாள
மிறுதிநா (ளோ)ங்கிய வெள்ள
மொப்பிட வரிதென் றுலகெலாம் வியப்ப
வோதசீ கரக்கட லேழும்
மைப்புய லேழு முட்கவான் முகடும்
வெடிபட மண்ணுல குலைய
செப்பரும் பலபே ரியங்களுங் தழங்க
வெழுந்தனன் தீவினைப் பகைஞன். உகூ

கிளைத்தவெற் பன்ன புயத்தில்வீழ் சடையுங்
கீற்றுவெண் கலைமதிக் கொழுந்து(ம்)
முளைப்பிறை யெயிறுந் திருமுகப் பொலிவும்
[1] முடிவினிற் றழல்விழி மூன்றும்
வளைத்தவான் றனுவை முரித்துவைத் தனைய
புருவமும் வயங்கிய வாரந்
திளைத்தமார் பகமுங் கட்டிய கச்சுந்
திறற்சுழற் றுள்களும் விளங்க. ௩0

ஒருகரந் துடியிற் பெருகொலி விளைப்ப
வொருகர மணியொலி விளைப்ப

1. முடிவினில் போலும்.

விருகர மெடுத்த சூலமுஞ் சுழற்ற
வெண்டிசா முகங்களும் நடுங்கி
வெருவா வனில மொளிக்கவுங் கார
மேல்கொளக் கால்கிளர்ந் தோங்கி
வருபெரு முருவத் தஞ்சன சயிலம்
வடிவுடன் வருவது மான. ௧௦

உலகுசெய் தவப்பே ருருக்கொடு நடத்த
லொப்பெனத் தீவினைத் திமிரம்
விலகவோர் கரிய ஞாயிறு கதிர்கள்
விளங்குறச் செறலீ தென்னக்
கலகமா னரகோ ளரிகொடுந் தொழிலாங்
கடறனைப் பருகுவா னுருத்து
மலர்தலைப் புவனந் தன்னில்முன் னில்லா
விடவையோன் எய்துதல் மான. ௧௧

இடிபடு தமரகந் துடிபட வதிர்த்தங்
கெழுமொலி மணியொலி விளைக்கக்
கொடிபடு கடிதிற் பொலிவினைச் சுழற்றுங்
கூரயிற் சூலமுன் கொள்ள
மடிவரு நரகே சரித்தழ லவிப்பான்
வருகரு முகிலென வந்தான்
படிமுழு தளிக்குங் கருணைகூர் வீர
பத்திரன் மித்திர னெவர்க்கும். ௧௨

மிகையெழு வீர சக்திமென் மேலு
மேலிட விலோசனக் கனல்வெம்
புகையெழ வதனம் பொறியெழப் புயங்கள்
புளகமே லெழமுகி லொளிக்க
நகையெழப் புருவ முரிவெழ நடந்து
நாடரு நாதவே தாந்தச்
சிகையெழு மொருசெஞ் சுடரிரு கமலச்
சேவடி சென்னிமேற் கொண்டான். ௧௩

கடல்விட வமுத நடமிடு சரண
காரண பூரண புரத்தைத்
தடவரை வளைத்தன் றெரித்தருள் பரம
சதுமறை யுதவிய முதல்வு

மடலவி ழிதழிச் சடைமுடி யமல
வானவ வெனநினைந் ததுவென்
னடல்புனை டணிக ளுண்டெனி லருளா
லருளுதி யென்றுநின் றறைந்தான். ௧௫

ஆதிநான் முகனும் வாசவா திபரு
மன்றுவேழ் வியிற்செயல் கருதிப்
போதமுள் ளடக்கி யாதிதே வனுமெம
புண்ணியக் கடவுளு நீயென்
றோதநின் றருளும் வீரபத் திரனை
யுண்மகிழ்ந் தினிதுபார்த் தருளிப்
பாதிமா மதியும் பகீரதிப் பெருக்கும்
படர்சடைப் பாம்பரன் பகர்வான். ௧௬

ஊழிநா ளல்லாக் காலையின் முன்ன
ரூழியி [1]னுந்தாக் கனல்போ
லாழிமா நரகோ ளரியுருத் தீயா
லகில மியாவையு மழிக்கின்றான்
வாழிநீ சென்றத் தீயினை நயங்கூர்
மழைகொடு மாற்றுதி யரிதேற்
பாழிமால் வீர நம்முருக் கோடி
பயங்கர மெவர்க்குமுண் டாக. ௧௭

நிட்கள சக்தி தனைநமை நினைந்து
நிட்கள சத்தியாற் கொணர்தி
கட்கெதிர் தூல சத்தியைத் தூல
சக்தியாற் கடிதினிற் கவர்தி
புட்கொடி நிலவு பொருநர மடங்கல்
பொருவரு வதனமு மதமு
முட்கவா னிமையோர் நமக்குநல் குதியென்
றுரைத்தன னுலகெலா முடையான். ௧௮

அண்டமுன் பயந்த வுமையவ டலைவ
னருளிய வருண்மொழிப் படிமுன்
கொண்டவெங் கோபந் தவிர்ந்துடன் சாந்தங்
கொண்டுதான் சென்னிமேற் கொண்டு

---

1. னுந்தா என்றுளது.

துண்டவெண் பிறையா னருள்கொடுத் தருளச்
சுரர்களுங் கணங்களும் போற்ற
வெண்டிசை புகழத் திறநர மடங்க
லெண்கென வங்கணோங் தனனுல். ௰௯

மதுகர விழிச் சடாதர னருளால்
மதுகையா லுலகினைப் பிகந்த
புதுமதி [1]மௌலி வீரபத் திரன்ற
னெழுச்சியின் றறிந்தவா (பு)கன்றே(ம்)
முதிர்சின நார மடங்கலை யடைந்து
மூதுல களிக்குமவ் வீரன்
விதிமுறை வழக்கா லினிதறி வுறுத்தி
விளர்புதல் விளம்பலுற் றனமால். ௨௦

வீரபத்திரன் எழுச்சிச் சருக்கம் முற்றும்.

ஆகத் திருவிருத்தம் 165.

## 4. அறிவுறுத்திய சருக்கம்.

அண்ட கூடத் தணிமுடி தாக்குற
வெண்டி [2]சாந்தத் தெழிற்புயஞ் சேர்தர
விண்ட பாதலந் தாளிணை மேவுறக்
கொண்ட கோபங் கொழுந்துவிட் டேறிட. ௧

வடதி சைக்கிரி வெண்ணிறம் வாய்த்தெனப்
புடவி யெங்கும் விழுங்கப் புரண்டுபாற்
கடல்கி ளர்ந்த தெனவெதிர் கண்டன
னடவு வெங்கொலை நார மடங்கலை. ௨

கண்டு சென்றுடன் காவலன் றீவினை
விண்ட நாயக வீரனும் பேரன்பு
கொண்டு தந்தைதன் மைந்தற்குக் கூறல்போ
லெண்ட ருஞ்சின மொழிக ளியம்புவான். ௩

மாத வப்பெயர் மாதவ நீயுல
கேத மற்றரு ளின்பம் வளர்ந்திட

---

1. மௌலி மட்டுமுளது. 2. சாந்தத் என்றுளது.

மாத வத்துறை மாமறை மல்கிட
வாத ரத்தி லவதரித் தாயரோ! ௪

கரக்க பாலக் கபாலி யருளினு
சிரக்க மெய்தியே யேழுல கங்களும்
புரக்கு மாறுமுன் பெற்றனை பொற்பினால்
வரத்தி னுலனக் கொப்பரெவ் வானவர். ௫

இரவி மாமதி யாவு மொடுங்கிட
விரத வானவர் வீடிட நாடரும்
பிரம வெள்ளப் பிரளயங் கோத்தெழ
தரைக ளேழுட னேழுந் தளர்ந்ததால். ௬

ஞால முற்று நடுங்கி யொடுங்கிடிக்
கோல மிக்கெழு வெள்ளத்தி னூடுநீ
சேலு ருத்தனைச் சேர்ந்துடன் சேலுருக்
[1]கூல வம்பியிற் கொண்டு [2]புரந்தனை! ௭

அன்றி வேறொரு கற்பவந் தத்தினிற்
றுன்று வெள்ளந் துதைந்திட வானுல
கொன்று மின்றி யுதிர்ந்துகு மென்றிட
பொன்ற யங்கும் பொருப்புச் சலித்ததால். ௮

அக்க ணத்தி லடைதற் பொருவரீ
தக்க வாமை யுருவம் தரித்துடன்
புக்கு மேருப் பொறுத்துல கங்களை
மிக்க வன்பி னிறுவி விளக்கினை! ௯

முன்னோர் கற்பத்தின் மூண்டெழும் வெள்ளமீ
தின்னி லம்படிந் தாழ்ந்திட வெய்திநீ
மன்னு கோட்டி லெடுத்து வராகமா
மன்ன மால்வடி வாலுல காற்றினை! ௰

நரம டங்க லுருவினை நண்ணினூற்
கரைக டந்துல கத்தைக் கலக்குமிவ்
விரணி யன்றனை யிங்ங னடர்த்தனை
புரணி னுன்னி லுயர்ந்தவர் யார்கொலோ! ௧௧

சாற்றொ ணாத வுலகத் தலைவநீ
யாற்றொ ணாத துயர்வந் தணைந்திடின்

1. கூடல என்றுளது. 2. புந்தனை என்றுளது.

மாற்றியிப் புவனங் கட்கு மாமகிழ்
வேற்றிக் காக்கு மிறையவனு நீயன்றே! கஉ.

மங்கை பாகன் மலரடித் தாமரைப்
பொங்கு பூசனை போற்றுமெய் யன்பினுக்
கிங்கு வேறுனக் கொப்பவ ரன்னெறி
தங்கி மேற்பட்ட தாபத ரில்லையால். கங.

வேத மும்பல வேழ்வியு மெய்வழி
நீதி யுந்தரு மங்கவு நித்தமா
யேத மின்றி யியல்பி நடப்பதுந்
தீதுந் தீர்வது நின்றன செயலரோ! கச

நந்து வெந்திற நார மடங்கலாய்
வந்த காரிய முற்றினை மாதவ
விந்த மாவடி வத்தா லெழுபுவி
னொந்த செய்கை நுவலற் கரியதால் கரு

மொய்ப்பு சேரிவ் வடிவையென் முன்னரே
யும்பர் காண வொடுக்குதி யென்றனை
னெம்பி ரானிமை யோர்முனி வோர்தொழுந்
தம்பி ரான்தனி வீர பத்திரன். கசா

வேறு

வெற்றி யாலிசை விறுயர் வீரபத் திரர்தாஞ்
செற்ற சொற்கடன் செவிப்புகத் தூநர மடங்கல்
கொற்ற மேலெழு கோபமு நகையுமேற் கொள்ளா
வுற்ற வீரனை நோக்கிநின் றிவையிவை யுரைக்கும். கஎ

நலங்கொள் போற்சில வார்த்தைக ணவின்றனை விடுதி
விலங்கி யேகுதி நின்னிட மேவுதி வீரத்
தலங்க ளெங்குள வங்குள சராசரத் தொகுதி
கலங்க வின்றழித் தொழிப்ப னேர்கணப் பொழுதின்கண்; கஅ

சங்க ரிக்குமத் தொழிலுடைத் தலைவனுக் கவனுற்
பொங்கு மூதுல கொருவராற் பொன்றுக வின்று
லங்க ளூநல கங்களை யழிக்குமக் கிழமை
தங்கு மென்னுர மடர்க்கவோர் தலைவன்வே றுண்டோ! கசு

சலச யோனியு மிந்திரா திபர்களுந் தத்த
நிலையி னின்றிடச் செய்தலென் செயலென நினைதி

# [1]சிவபாரத சரித்திரம்

## முதலாவது அத்தியாயம்

ஸ்ரீ விக்னேசுவரருக்கும் ஸ்ரீ சரஸ்வதி அம்மனுக்கும் ஸ்ரீ குரு பாதத்துக்கும் சாஷ்டாங்கமாய் நமஸ்காரம் பண்ணி இந்த சிவபாரத சரித்திரம் சொல்லு கிறேன்.

பூர்வத்திலே பரமானந்த சர்மா என்பெருரு பிராமணோத்தமன் தீர்த்த யாத்திரைக்குப் புறப்பட்டுக் காசிக்கு வந்தார். சகல ஜீவராசிகளுக்கும் மோட்சத்தைக் கொடுக்கிற மகா க்ஷேத்திரமான ஸ்ரீ விசுவேசுவரர் தாரக பிரம்ம உபதேசம் பண்ணுகிற அந்த க்ஷேத்திரத்திலே அந்தப் பிராமணன் ஸ்நான விதிகள் பண்ணிக்கொண்டு ஸ்ரீ விசுவேசுவரர் தரிசனம் செய்துவந்தார். அந்த கங்கா நதிக் கரையிலே சகல தர்மங்களும் தெரிந்த அவர் பத்மாசனம் போட்டுக் கொண்டு தேதீப்பியமானமாய் பிரம்ம வர்ச்சஸத்தோடு சகல சாஸ்திரம் தெரிந்தவர். பிரம்ம விசாரணைப் பண்ணிக்கொண்டு புராணிகருக்குள்ளே சிரேஷ்டனாய் இருக்கப்பட்ட கோவிந்த பட்டருடைய புத்திரர் பரமானந்த சர்மா. அவருக்கு ஏகவீராதேவி பிரசாதத்தினாலே சரஸ்வதி பிரசன்னமானாள்.

அவருக்கு பரமானந்தர் என்றும் கவீந்திரர் என்றும் பெயர். அப்படிப் பட்டவரை காசியிலே இருக்கும் பெரியபிராமணர் பார்த்து வெகு சந்தோஷப் பட்டார். அப்படிப்பட்ட பிராமணரை இந்த பரமானந்தர் வெகு உபசாரம் பண்ணினார். அந்த பிராமணர் கவீந்திரருடைய சமீபத்திலே உட்கார்ந்து கொண்டு மகா பரிசுத்தமாயிருக்கிற சிவாஜி ராஜாவினுடைய சரித்திரம் கேட்க வேணுமென்று யோசனை பண்ணிக்கொண்டு ஓய்! பரமானந்தரே! இந்த பூமியைப் பரிபாலனம் செய்கிற சகல ராசாக்களிலே சிரேஷ்டனாய் இருக்கப்பட்ட எவருக்கு துளஜா பவானி பிரசாதத்தினாலே ராஜ்யம் வந்தது? அவர் மகா தபசி, மஹா விஷ்ணுவினுடைய அம்சம், பிரதாப வந்தன், மகா தேசோராசியா யிருக்கப்பட்டவர், சகலதிக்குபாலகருடைய காந்திக்குச் சமானமாயிருக்கப் பட்டவர், ஜிதேந்திரியர், சத்துருக்களுக்குப் பயங்கரனாய் தோன்றுபவர், தனுர் தாரிகளுக்குள்ளே சிரேஷ்டர், புத்திமனத்தர், மகா பராக்கிரமம் உடைத்தவர், சத்திய வாக்குத் துரந்தர், பெரியவர்களுடைய வசனம் கேட்கிறவர், பிராமணரை இரட்சிக்கிறவர், துஷ்டனாயிருக்கப்பட்ட துலுக்கருக்கு சிக்ஷை பண்ணுகிறவராய் பிரசன்னமாயிருக்கப்பட்ட ஜனங்களுக்கு சுகத்தைக் கொடுக்கிற வராயிருக்கப்

---

1. T. M. S. S. M. Library, Tamil Manuscript No. D. 630/M. 214. பரமானந்தர் என்னும் கவீந்திரர் வடமொழியில் இயற்றிய சிவபாரதத்தை அடிப்படையாகக் கொண்டு தமிழில் எழுதப்பட்ட சரித்திரம்.

பட்ட சிவாஜி ராஜாவினுடைய சரித்திரம் நீர் அம்மனுடைய பிரசாதத்தினாலே சொல்லவேண்டும். அப்படி பண்ணின கிரந்தம், அர்த்த புஷ்டியாய், சந்தர்பமாய், வெத சமத்காரமாய், காதுகளுக்கு இன்பமாய், தோஷாகிதமாய் இருக்கப்பட்ட கதைகளெல்லாம் நமக்குச் சொல்ல வேண்டுமென்று மகா புத்திசாலியாயிருக்கப் பட்ட பிராமணர் கேட்ட விடத்திலே அந்த பரமானந்த கவீந்திரர் சொல்ல ஆரம்பித்தார்.

சிவாஜி ராஜாவினுடைய சரித்திரம் பாரதக்கதை கேட்டால் எப்படி பாபத்தைப் போக்கடிக்குதோ அப்படிப்பட்ட கதைகள் சொல்லுகிறேன், கேளுங்கள். தெட்சிண தேசத்திலே வாசம் பண்ணுகிற ஷாஜிராஜாவினுடைய குமாரன் சிவாஜிராஜா, அவர் ஸ்ரீமன் நாராயணனுடைய அம்சம். தேவதைகளுக்கு திரேஷம் பண்ணுகிறவர்களுக்கு சத்துருவாக யிருக்கப்பட்டவர். இப்படிப்பட்ட வர் என்னை நல்ல வார்த்தை சொல்லி சொன்னது; நான் என்னென்ன சரித்திரங் கள் பண்ணியிருக்கிறேனோ இனிமேல்பட என்னென்ன பண்ணப் போகிறேனோ, அதெல்லாம் என்னுடைய பாட்டனார் மாலோஜி ராஜா முதற்கொண்டு பிரசித்தமா யிருக்கிற கதைகளை நீர் விஸ்தாரமாய் சரித்திரம் பண்ண வேண்டுமென்று சொன்னார். அதற்கு நான் நல்லது என்று சொல்லி என் வீட்டுக்கு வந்து யோசனை பண்ணினது பாரதம் போலே இவருடைய சரித்திரங்கள் இருக்கிறது. இவர் மனிதரிலே சேர்ந்தவரல்ல. இவருடைய மனதிலேயானால் இப்படி சரித்திரம் பண்ணவேண்டுமென்று இருக்கிறது. இதற்கு என்ன பண்ணலாமென்று யோசனை பண்ணிக் கொண்டிருக்கும்போது சாட்சாத் பகவதி அம்மன் வந்து எனக்கு சொன்னது.

ஓகோய்! கவீந்திரரே! பரமானந்தரே! நீர் சிந்தனை பண்ணவேண்டாம். உனக்கு நான் அனுகூலமாயிருக்கிறேன். என்னுடைய அனுக்ரஹத்தினாலே தானே ராஜா வந்து உமக்குச் சொன்னாரென்று தயவோடு கூடினவள், சதுர் புஜத்தோடு இருக்கப்பட்டவள், அம்மன் என்னுடைய இருதயத்தில் பிரவேசித்தாள். அன்றையமுதற்கொண்டு வாக்கு தேவதை சரஸ்வதி அம்மன் என்னுடைய நாக்கிலே அர்த்தத்தோடு சர்வகாலமாயிருந்துவிட்டாள். நான் கண்ணாலே பாராமல் காதினாலே கேட்காமல் இருக்கப்பட்ட சரித்திரத்தைப் பிரத்யட்சமாய்ப் பார்த்ததுபோலாயிற்று. பகவான் எப்படியோ அப்படி எண்ணிக்கொண்டு இந்த மகாபுண்ணியகரமாய் இருக்கப்பட்ட சிவபாரத சரித்திரத்தை ஆரம்பித்தேன்.

ஓகோ! யோக்கியமாயிருக்கப்பட்ட பிராமணரே! இந்த சிவபாரத சரித்திரத்திலே சம்போமஹாதேவருடைய மகிமை, துஷ்டமாயிருக்கப்பட்ட [1] தைத்தியர்களை மர்த்திச்சவளான துளசாதேவி அம்மனுடைய மகிமை, தர்மார்த்த

---

1. தைத்தியர் = அசுரர்.

காமமோக்ஷங்களுடைய மகிமை, தீர்த்தங்களுடைய மகிமைகளும் சொல்லியிருக்கிறது. இன்னும் வெகுபேர் துலுக்கர்களோடு யுத்தம் பண்ணினதும் அந்தத் துலுக்கரை நாசம் பண்ணுவதற்கு இவர் ஜென்மமெடுத்ததும், தேவ பிராமணர்களுடைய மகிமைகளும் இதரமாய் இருக்கப்பட்ட ராஜாக்களுடைய சரித்திரங்களும், யானை குதிரைகளுடைய இலட்சணங்களும், கோட்டை கொத்தளங்களுடைய இலட்சணங்களும், ராஜாக்களுடைய நீதி இலட்சணங்களும், சூரியவம்சத்திலே ஜெனித்தவருடைய கதைகள் உங்களுக்குச் சொல்கிறேன், சாவதானமாய்க் கேளுங்கள் என்று சொல்வதற்கு ஆரம்பித்தார்.

தெற்குப் பிராந்தியத்திலே மால்வர்மா என்று சூரியவம்சத்திலே ஜெனித்து சூரியனுக்கு சமானமாயிருக்கப்பட்ட காந்தியையுடைத்தான ஒரு ராஜா இருந்தார். அவர் தர்மிஷ்டர். மகாராஷ்டிர தேசத்தைப் பரிபாலனம் பண்ணுகிறவர். மகா அழகோடு கூடியவர். புண்ணியகரமாயிருக்கப்பட்ட பீமாதீர சமீபத்திலே ராஜ்யபாரம் பண்ணிக்கொண்டு சைய பர்வதப் பிரதேசமெல்லாம் ஆக்ரமித்து ராஜ்யம் பண்ணிக்கொண்டிருக்கும்போது இவரை சத்துருக்கள் கண்ணெடுத்துப் பார்க்கப்படாமல் புஜபலத்தோடு இருக்கப்பட்ட மால்வர்மா, உமாபாயீ என்கிறவளை விவாகம் பண்ணிக்கொண்டு வெகு பிரீதியாய் நல்ல குணங்களோடு கூடியவளாயிருக்கும் மனைவி கிடைத்தாளென்று சாவித்திரியோடு சத்தியவான் எப்படியோ அப்படி ஆனந்தம் அனுபவித்துக்கொண்டு அவளை நவரத்ன பூஷணங்களோடு அலங்கிருதம் பண்ணி, குபேரன்போல் பாக்கியம் உடைத்தானவனாய் சகல தர்மங்களும் பண்ணிக்கொண்டு அக்கினிஹோத்திரம் யக்ஞாதிகளுக்கு அநேக தெட்சிணைகள் கொடுத்துப் பண்ணிவைத்துக்கொண்டு சம்போ மகாதேவருக்குப் பிரீதியர்த்தமாய் மகா தானங்கள் கொடுத்து சம்போ மகாதேவருக்குப் பக்தனாயிருக்கப்பட்டவர், அந்த சுவாமிக்கு சமுத்திரம்போல ஒரு குளத்தை வெட்டிவைத்தார். செம்போயென்றொரு பர்வதம், அங்கே மேருவுக்குச் சமானமாயிருக்கப்பட்ட மாடிகளும் வெகு விருக்ஷங்களுமாயிருக்கப்பட்ட தோட்டங்களும் நடவாவிகளும் அதற்குப் பொன்னாலே படிகளும் தண்ணீர் பந்தல் தர்ம சாவடிகள் இப்படிப்பட்ட அநேக தர்மங்கள் பண்ணிக்கொண்டிருந்தார். அவருக்கு சகல பாளையக்காரக் கூட்டங்கள் பாதாக்கிராந்தர்களாயிருந்தார்கள்.

இப்படியிருக்கையில் மகா துர்க்கம் தேவகிரியிலே இருக்கும் நிஜாம்ஷா என்னும் ஒரு தர்மிஷ்டன் தன்னுடைய தேசத்தைப் பரிபாலனம் பண்ணிக்கொண்டிருந்தான். அவருக்கு சாதவராவாதி முதற்கொண்டு தெட்சிண தேசத்திலேயிருக்கப்பட்ட ராஜாக்களெல்லோரும் அனுசரித்துக்கொண்டிருந்தார்கள். அப்போது எதல்ஷா என்று ஒரு துலுக்கன் தன்னுடைய விஜய நகரத்திலே இருந்துகொண்டு உறமுறையார்களோடு ராஜ்யம் பண்ணிக்கொண்டிருந்தார். அப்போது ஒரு காரிய நிமித்தியமாய் எதல்ஷாவுக்கும் நிஜாம்ஷாவுக்கும் விரோதம் வந்தது,

அப்போது நிஜாம்ஷா மால்வர்மா என்கிற ராஜா மகா பிரபலமாயிருக்கிருரென்று கேட்டு அவரைத் தனக்கு சகாயார்த்தமாய் அழைத்துவரச் செய்தார். அவரும் இவருடைய பிரீதிசம்பாதிக்க வேண்டுமென்று தேவகிரிக்கு வந்து சேர்ந்தார். அந்த மாளவ ராஜாவினுடைய தம்பி விட்டோஜி ராஜா தன்னுடைய தளத்தோடு அவரும் தேவகிரிக்கு வந்தார். இவர் தமையன், தம்பி இரண்டுபேரும் வந்து சேர்ந்ததினலே நிஜாம்ஷா, சந்தோஷப்பட்டு அவர்களுக்கு வெகுமானம் பண்ணினுன். அதன் பிறகு மாலோஜி ராஜா நிஜாம்ஷாவுக்கு சத்துருக்கள் யாரார் இருந்தார்களோ அவர்களையெல்லாம் ஜெயித்து துரத்திவிட்டார். விட்டோஜி ராஜாவும் நிஜாம் ஷாவுக்கு சகாவாயிருந்து கொண்டு அவருடைய மனதுபடி நடந்துவந்தார். நிஜாம் ஷாவுக்கு சர்தார் கூட்டங்கள் வெகுபேர் இருந்தாலும் அவர்களைவிட இந்த மாலோஜி ராஜாவின் மேல் உள்ள தனிப்பட்ட பிரியம் காரணமாக அவருக்கு சிறிது தேசங்கள் இனுமாய்க் கொடுத்தார். இந்த மாலோஜி ராஜா முன்பிருந்த தன்னுடைய ராஜ்யத்திலே தன்னுடைய பிரதானிகளை வைத்து, தான் நிஜாமன் கொடுத்த ராஜ்யத்திலே இருந்துவிட்டார்.

இப்படி சிறிது நாளான பிறகு அந்த மாலோஜி ராஜா மனைவியோடுகூட புத்திர சந்தானமாக வேண்டுமென்று அந்த மகாதேவருடைய ஆராதனம் பண்ணிக் கொண்டிருக்கும்போது கொஞ்ச நாளைக்குப் பிறகு அவருடைய மனைவி உமாபாயீ கர்பிணியானுள். அதனுல் ராஜாவுக்கு வெகு சந்தோஷமாயிற்று. பத்தாம் மாதம் நல்ல முகூர்த்த லக்கனத்திலே சகல ராஜ சின்னங்களுடனே வெகு காந்தி வந்தனுய் சந்திரனைப்போல் முகத்தை உடைத்தவனுய் ஆசானுபாகுவாய் தேதீப்பிய மானமாய் பிள்ளை பிறந்தது. அந்த செய்தி மகாராசாவுக்குப்போய் சொன்னுர்கள். அந்த செய்தி கேட்டு வெகு ஆனந்தத்தோடு ஸ்நானம் பண்ணி சுப்ரமணியருடைய முகத்தை சுவாமி எப்படி பார்த்தாரோ அப்படி மகாராஜா வந்து புத்திர முகத்தைப் பார்த்து ஆனந்தமடைந்தார் அதன் பிறகு புரோகிதரை அழைத்து சாதகர்மத்தைப் பண்ணினுர் புண்ணியாகவாசனம் பண்ணும்போது திவ்யமாய் மங்களகரமாய் சத்தங்கள் உண்டாயிற்று. கேளிக்கைகளாயிற்று. பாடகர்கள் மதுரமாய் கானங்கள் பண்ணினுர்கள். கட்டியக்காரர்கள் தோத்திரத்தைப் பண்ணினுர்கள். பெரிய பிராமணர் ஆசீர்வாதம் பண்ணினுர். அந்த தேசத்திலே அவரவர் வீடுகளிலேயும் இம்மாதிரி உற்சவத்தைப் பண்ணினுர்கள்.

அப்போது மாலோஜி ராஜா பசுக்கள், யானைகள், குதிரைகள், முத்து மாலைகள், பவள மாலைகள், மோகன மாலைகள், அஸ்தகடையங்கள், பதக்கங்கள், சரப்பளிகள், கடுக்கன்கள், மோதிரங்கள் முதலிய பூஷணங்களெல்லாம் பிராமணர்களுக்கு தானமாகக் கொடுத்தார், யார் யார் எது எது கேட்டார்களோ அதெல்லாம் கொடுத்தார். அதன்பிறகு சோதிடர்களை அழைத்து நல்ல

முகூர்த்தம் பார்த்து நாமகரணத்தைப் பண்ணினார்கள். ஷாஜி ராஜாவென்று பெயர் வைத்தார்கள். இப்படி அந்தக் குழந்தை சுக்கிலபட்சத்திலே நாளுக்கு நாள் எப்படிச் சந்திரன் விருத்தியடைவாரோ அப்படிக் குழந்தை வளர்ந்து தாயார் தகப்பனுக்குத் தன்னுடைய விளையாட்டினாலே ஆனந்தத்தைக் கொடுத்துவந்தார். அதன்பிறகு இரண்டு வருஷத்துக்கு மேல் மாலோஜி ராஜாவினுடைய தர்மபத்தினியிடத்திலே இரண்டாம் பிள்ளை பிறந்தது. அதற்கும் சாதகர்மங்கள், நாமகர்பங்கள் பண்ணி சரபோஜி என்று பெயர் வைத்தார்கள். இப்படி ஷாஜி, சாபோஜி இரண்டு பிள்ளைகளையும் பார்த்து வெகு ஆனந்தத்துடன் ராஜ்யம் பண்ணிக்கொண்டிருந்தார்.

## இரண்டாம் அத்தியாயம்

இரண்டாம் அத்தியாயத்தினுடைய கதை என்னவென்றால் ஷாஜி ராஜாவுக்கு ஐந்து வருஷமாயிற்று அப்போது நிஜாம்ஷா மாலோஜிராஜாவை அழைத்து அவரோடு தன் சேனைகளையுங் கொடுத்து இந்திராபுரத்துமேல் சண்டைக்கு அனுப்பினார். அதன்படி இருவரும் போய் மகா பலமாய் வெகு சண்டை செய்தார். சத்துருக்கள் சேனை அதிகமானபடியினாலே மாலோஜி ராஜாவை கோட்டையைப்போல் சுற்றிக்கொண்டார்கள். இவரும் சூரனானபடியினாலே பின்வாங்காமல் சத்துரு சேனைகளுக்குள்ளே புகுந்து சின்னபின்னமாய் அடிக்கும் போது வெகு சேனைகள் மடிந்தன. ஆறுகள் பிரவேசிக்கிறதுபோல் இரத்த நதிகள் பிரவேசித்தன. அதைப் பார்க்கும்போது எப்படியிருந்ததென்றால் செத்துப்போன யானைகள் மிதந்துவருவது பர்வதம் போலவும், செத்துப்போன குதிரைகள் மிதந்துவருவது அலைகளைப் போலவும், மனித சரீரங்கள், தலைகள் மிதந்துவருவது முதலைகள், மச்சங்களைப் போலவும், ஒடிந்துவிழுந்த தேச சத்திர சாமரங்கள் அமுச பட்சிகளைப் போலவும் இப்படியாகத் தோன்றி, சண்டைகள் செய்து தன்னுடைய சேனைகளோடுகூட தானும் சொர்க்கத்தே போய்ச்சேர்ந்தார்.

இந்த சமாசாரம் அவருடைய தர்ம பத்தினி உமாபாயீ அம்மாள் கேட்டு வாழை மரம் காற்றினால் கீழே விழுந்தாலெப்படியோ அப்படி கீழே விழுந்து வெகு துக்கத்தை அடைந்தாள். அப்போது கொழுந்தனார் விட்டல் ராஜா வந்து வெகுசமாதானம் செய்தார். இந்த மிர்த்திய லோகம் சாஸ்வதமன்று, கடைசியிலே எல்லோரும் போகிறவர்கள்தான். அதிலும் இரணகளத்தில் யுத்தம் பண்ணி அஸ்திரத்தினாலே உயிர் போகிறவருக்கு வீரசொர்க்கத்திலேயிருந்து ரதம் வந்து தேவர்கள்போலிருப்பார்கள் என்று சாத்திரத்திலேயுமிருக்கிறது. ஆனால் உன்னைப்போலொத்த பதிவிரதையை விட்டுவிட்டுப் போவது உத்தமமல்ல. இந்த மனிதர்களுடைய சரீரங்களுக்குப் பால், நெல், சர்க்கரை, பஞ்சபட்ச பரமான்னங்கள் சாப்பிட்டுக்கொண்டு நல்ல தைலங்களினாலே அப்பியங்கனம்

பண்ணிக்கொண்டு [1] அம்சதூளிகா தல்பத்துமேலே படுத்துக்கொண்டு பிரீதிகர மாயிருக்கப்பட்ட ஸ்திரீகளை அனுபவித்துக்கொண்டிருந்தாலும் கடைசியிலே சரீரத்தை விட்டுவிட்டு ஆத்மா வேறாய்ப்போய்விடுகிறது. இப்படியிருப்பதினாலே ஒருவருக்கொருவர் சம்பந்தமில்லாமல் இருக்கிற பிரபஞ்சமானபடியினாலே நீ புத்தி சாலியாயிருக்கப்பட்டவள், சகலமும் தெரிந்தவளானபடியினால் துக்கத்தை விட்டுவிட்டு சந்திர சூரியனைப்போல் மகா தேஜஸ்யுடைத்தானவர்களா யிருக்கப்பட்ட ஷாஜி, சரபோஜி இருவரையும் பார்த்துக்கொண்டுவந்தால், அந்தப் பிள்ளைகளைத் தொட்டு நம்முடைய வர்சத்திற்குக் கீர்த்தியுண்டாகும். அந்தக் குழந்தைகள் உன்மேல் பிராணனை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகையினால் உன் உயிரைக் காப்பாற்றிக்கொண்டிருக்கவேண்டுமென்று இப்படிச் சமாதானம் பண்ணினார். அதன்பிறகு கண்விழித்துப் பிள்ளைகளைப் பார்த்தவுடனே துக்கம் போய்விட்டது.

அதன்பிறகு விட்டல்ராஜா இந்தப் பிள்ளைகளை முன்னிட்டுக்கொண்டு மாலோஜி ராஜாவுக்கு உத்திரகிரியைகள் பண்ணிவிட்டு அந்தப் பிள்ளைகளுக்குத் தானே ராஜ்யத்தைப் பட்டாபிஷேகம் செய்வித்துக் காப்பாற்றிக்கொண்டுவந்தார். அந்தப் பிள்ளைகளும் சிறிய தகப்பனார் மனதுபடி நடந்துகொண்டு தன்னுடைய ராஜ்யத்தையும் விசாரணை பண்ணிக்கொண்டிருந்தார்கள். இந்தச்செய்தி நிஜாம்ஷா கேட்டு மாலோஜி ராஜா போனது தன்னுடைய ஒரு புஜம் போனதென்று விசனப்பட்டு அதன்பிறகு அந்த ஷாஜி, சரபோஜி இரண்டு பிள்ளைகளையும் விட்டல் ராஜாவையும் அழைத்து சமாதானம் பண்ணி தகப்பனாருடைய ராஜ்யத்தை பிள்ளைகளுக்குத் தானே கொடுத்து வஸ்திரபூஷணம், யானைகள், குதிரைகள் கொடுத்து அனுப்பிவைத்தார். இந்தப் பிள்ளைகளும் சிறிய தகப்பனார் மனதுபடி நடந்துகொண்டுவந்தார்கள். ஜனங்களும் ஷாஜிராஜாவைப் பார்த்து இவர் நம்முடைய ராஜாவென்று வெகு சந்தோஷப்பட்டார்கள். சிறு பிள்ளைகளாயிருந்து ராஜ்ய விசாரணை பண்ணுவதையும் ஜனங்களைப் பரிபாலனம் பண்ணுவதையும் பார்த்து இதர ராஜாக்களும் வெகு சிலாகித்தார்கள். அதன்பிறகு ஷாஜிராஜாவுக்கு [2] யௌவனம் வந்தது. மீசைகள் வளரத்தலைப்பட்டது. உடம்பு காந்தி சொர்ணம் போல, கண்கள் காதுபரியந்தம், கிளிமூக்குப்போலே மூக்கும், சந்திரன்போலே முகமும், முழங்கால்வரை கைகளும் இப்படிப்பட்ட இலட்சணத்தோடு கூடியவர் தானம் கொடுப்பதிலே கர்ணனே, பராக்கிரமத்திலே அர்ஜுனனே என்னும்படி ஜனங்கள் மெச்சிக்கொண்டு இருக்கிறவரை சாதவ ராஜா பார்த்து தன்னுடைய பெண்ணை இவருக்குக் கொடுக்கவேண்டுமென்று ஜோசியர்களை அழைத்து முகூர்த்தம் பார்த்துத் தன்னுடைய பெண் ஜீஜாயியை கல்யாணம் செய்து கொடுத்தார்.

---

1. அன்னத்தூவியாலான மெத்தை.
2. யௌவனம்—இளமை.

அந்தப் பெண் மகா அழகோடு கூடியவள். எப்படியென்றால் தாமரையிதழ் போலே கண்களும், அஷ்டமி சந்திரனைப்போலே நெற்றியும், மன்மதனுடைய வில்போன்ற புருவங்களும், பொன் கிளிஞ்சிபோலே காதுகளும், ஜாதி புஷ்பத்தினுடைய அரும்புபோலே [1] தந்தபந்திகளும், கோவைப்பழம்போலே உதடுகளும், சங்கம்போலே கழுத்தும், கோகிலம்போலே சுரமும், தாமரைத் தண்டு போலே கைகளும், மாதுளம்பழம் விதைபோலே நகங்களும், சிறுத்த வயிறும், யானைத் துதிக்கைபோலே தொடைகளும், உள்ளங்காலிலே சங்கு சக்ர ரேகை களும் இப்படிப்பட்ட அழகோடு கூடிய மனைவியைப் பார்த்து சகல ரத்தின சகிதங்களாயிருக்கப்பட்ட பூஷணங்கள் போட்டு சந்தோஷத்துடனே அவளும் ஷாஜி ராஜாவினுடைய சவுந்தரியத்தைப் பார்த்து ஒருவருக்கொருவர் சந்தோஷப் பட்டுக்கொண்டு கிரகப்பிரவேசம் பண்ணினார்கள். அப்போது ஜனங்கள் பார்த்து ஸ்ரீ மகாலட்சுமியானவள் மகாவிஷ்ணுவோடுகூட கிரகப்பிரவேசம் செய்ததுபோல் இருக்கிறதென்று சொல்லிக்கொண்டார்கள். பெரியவர்களாயிருக்கப்பட்ட சுமங்கிலிகள் வந்து ஆரத்தி எடுத்தார்கள். அந்த ஜீஜாயி அம்மாள் மாமியாருக்கும் பெரியவர்களுக்கும் நமஸ்காரம் பண்ணி சேவித்தாள். அவர்களும் ஆசீர்வாதம் பண்ணினார்கள். அந்த உமாபாயி மருமகளைப் பார்த்து மருமகளுடைய உபசாரமும் சிசுவடைகளும் பார்த்து வெத சந்தோஷப்பட்டாள்: அதன்பிறகு விசுவாசராயர் என்கிறவர் தன்னுடைய பெண் மகா குணசாலியாயிருக்கப்பட்ட துர்காபாயியை சரபோஜி ராஜாவுக்கு கலியாணம் செய்துகொடுத்தார். குணசாலி களாயிருக்கப்பட்ட இரண்டு மருமகளையும் தன் பிள்ளைகளையும் பார்த்து மகா சந்தோஷத்தோடு உமாபாயி ஆனந்தமாயிருந்தாள்.

அதன்பிறகு ஷாஜி ராஜாவும் சரபோஜி ராஜாவும் தன்தன்னுடைய ஸ்திரீகளுடன் சோபிதமாய் நிஜகீர்த்தியுடனே தன்னுடைய தாயாருக்கும் தன்னுடைய ராஜ்யத்து ஜனங்களுக்கும் ஆனந்தத்தைக் கொடுத்துக்கொண் டிருந்தார்கள். தமபி சரபோஜி ராஜாவினுடைய சகாயத்தினாலே அக்கினி பகவானுக்கு வாயு பகவான் எப்படி சகாயமோ அந்த ரீதியாய் ஷாஜி மகாராஜா பீஷ்மாச்சாரியார்போலே பராக்கிரம வந்தனாய் யுத்த இரண களத்திலே ஜெயம் பண்ணிக்கொண்டு நிஜாம்ஷாவுக்கு சந்தோஷத்தைக் கொடுத்துக்கொண்டு துஷ்ட ஜனங்களை சிட்சை பண்ணிக்கொண்டு வந்தார்.

## மூன்றும் அத்தியாயம்

இப்படியிருக்கும்போது சிறிய தகப்பனார் விட்டல் ராஜா சொர்க்கத்தை யடைந்தார். அதன்பின் தாயாருடைய அனுமதியாய் நடந்துகொண்டு வருகிற ஷாஜிராஜா தன்னுடைய புஜபலத்தினாலே சகல ராஜ்ய பாரம் கைவசமாய் பண்ணிக்கொண்டு வந்தார். இப்படி வருகிற நாளில் விட்டல் ராஜாவினுடைய

1. பல்வரிசைகள்.

பிள்ளைகள் ஸம்பாஜி, சேலோஜி, மல்லோஜி, பரசோஜி, நாகோஜி, மாணோஜி, கங்காஜி, த்ரிம்பக்ஜி இந்த எட்டுபேரும் மாலோஜி ராஜாவினுடைய பிள்ளைகள் ஷாஜி, சரபோஜி இருவரும், ஆக பத்து பேரும் ஒருவருக்கொருவர் சகாயமாய் வில்லாளிகளுக்குள்ளே சமர்த்தராய் நிஜாம்ஷாவுக்கு பிரீதி வந்தராய் புத்தி வந்தராய் சூரர்களானபடியினாலே நிஜாம்ஷாவைத் தவிர இதர பேர்களுக்கு [1]பரவை பண்ணாமல் திரணமாய் எண்ணிக் கொண்டுவந்தார்கள். அவர்களுடைய சியாமள தேகம் பர்வதத்துக்கு சமானமாய் உயரமும் புஷ்டியும், சூரியனுக்கு சமானமான காந்தியுடைத்தானவர்களாய் கர்வத்தினாலே இதர பேர்களை சட்டை பண்ணாமல் இருந்தார்கள்.

இப்படி யிருக்கும்போது ஒருநாள் நிஜாம்ஷா சிம்மாசனத்திலே உட்கார்ந்து கொண்டு சதுர் பண்ணினார். அப்போது சகல ராஜாக்களும் வந்து பேட்டி வாங்கி சதுர் கலைந்தவுடனே அவரவர் தன்னுடைய ஜனத்தோடு அரண்மனையை விட்டு வெளியே வருமபோது எல்லோருடைய ஜனங்களும் ஒருமிக்கவந்து சந்தித்த படியினாலே அவரவருடைய ஜனங்கள் சந்தடி விலகுகிறபோது சந்தடி அடங்க மாட்டாமல் வரத் தலைப்பட்டது. அந்தந்த ராஜாக்களுடைய [2]சன்னுகம், [3]பாலாக்காரர், [4]பர்ச்சிக்கார பட்டர், கேடையக்காரர் தள்ளிக்கொண்டு முன்னே நடந்தார். எல்லோரும் சூரர்கள், கிரீடம் வைத்திருக்கப்பட்டவர். கழுத்திலே முத்து ஆரங்கள், பதக்கங்கள், இரத்தின குண்டலங்கள், அஸ்த கடையங்கள் போட்டுக்கொண்டு சிறிது பேர் யானையின் மேல், சிறிது பேர் குதிரையின் மேல், சிறிதுபேர் பல்லக்கில் ஏறிக்கொண்டு போகும்போது ஒருவருக்கொருவர் நான் சூரன் நீ சூரன் என்கிறதாய கர்வத்தினாலே போகும்போது கண்டாகலே என்கிறவன் தன்னுடைய யானையை முன்னே விட்டான். அந்த யானைக்கு மதம் வந்து அங்குள்ளவர்களை சின்னா பின்னமாய் அடித்து சேதம் விளைக்கத் தலைப்பட்டது. மாவுத்தன் அங்குசத்தினாலே குத்தி எப்படி இழுத்தாலும் அடங்காமல் பிரளய காலம் போல் அடிக்கத்தலைப்பட்டது.

அப்போது சாதவராவினுடைய பிள்ளை தத்தவர்மா என்கிறவன் முன்னே வந்து இந்த யானையை அடித்துத் தள்ளுங்கள் என்று தன்னுடைய ஜனங்களுக்கு உத்தாரம பண்ணினான். சிறிது பேர் அம்புகளினாலேயும், சிறிதுபேர் கத்தியினாலேயும் சிறிதுபேர் பாலாக்கழிகளினாலேயும் சிறிதுபேர் பர்ச்சிகளினாலேயும் அடித்தார்கள். அதற்கும் அடங்காமல் குதிரைக்காரரையும், ஜனங்களையும் இழுத்துக் காலிலே தேய்க்கத் தலைப்பட்டது. அப்போது தத்தவர்மாதான் முன்னேவந்து சிம்மம் போலே நின்றுகொண்டு தீட்சணமாயிருக்கப்பட்டக் கத்தியினாலே யானையினுடைய துதிக்கையில் வெட்டினான். அதனால் காயம்பட்டு பர்வதத்திலிருந்து ஜலம் வீழ்வது

---

1. பர்வா என்ற சொல் மரியாதை என்ற பொருளில் வந்தது போலும்.
2. போர்க்கவசம்
3. & 4. ஈட்டிபோன்ற ஆயுதங்கள் தாங்கிய மெய்காவலாளர்கள்.

போல் இரத்தம் புறப்பட்டது. அப்போது விட்டல் ராஜாவினுடைய பிள்ளைகள் ஸம்பாஜி, கேலோஜி இருவரும் இந்த கண்டாகலேய்க்கு சகாயம் பண்ணவேண்டு மென்று அந்த யானையைக் காப்பாற்றுவதற்காக முன்னே வந்தார். அப்போது தத்தவர்மா யானையை விட்டுவிட்டு ஸம்பாஜியின்மேல் சண்டையிடலானுர். இரண்டு பேர்களுடைய சேனைகளுக்கும் சண்டை முற்றிக்கொண்டு விட்டதால் ஷாஜி ராஜா சாதவ ராஜா மாமனுரென்றும் எண்ணுமல் தம்பிக்குச் சகாயமாய் முன்னே வந்து நின்ருர். அப்போது மச்சினன் தத்தவர்மா வில்லெடுத்துக்கொண்டு அனேக பாணங்களினுலே அடித்தான். சேனைகளும் ஒருவருக்கொருவர் பாணங் களினுலே கத்தியினுலே அடிக்கும்போது சிறிது ஜனங்களுக்கு கால் அறுந்து கையறுந்து, கழுத்தறுந்து, இரத்தப் பிரவாகமாயிற்று. யானைகள், குதிரைகள் மிகுதியாய் சேதப்பட்டன. தலைகள் அறுந்துபோன உடம்புகள் கூத்தாடத் தலைப்பட்டன. ஸம்பாஜியினுடைய அம்பு வேகத்தினுலே மிகவும் காயப்பட்டு தத்தவர்மா என்கிறவன் சொர்கலோகத்தை அடைந்தான்.

அதைப் பார்த்து சாதவராஜா பிள்ளை போன துக்கத்தினுலே வெகுரோஷத் தோடு இந்த ஸம்பாஜியை அடித்துப் பழிவாங்க வேண்டுமென்று கிருஷ்ணசர்பம் போல் எதிரே வந்தபோது ஷாஜிராஜா பார்த்து தம்பியை இரட்சிக்க வேண்டு மென்று மாமனுரென்றும் தாட்சண்யம் பாராமல் முன்வந்து நின்ருர். அந்த சாதவ ராஜாவும் மருமகனென்று பாராமல் மிக்க பலத்தோடு புஜத்தின் மேலே அம்பினுல் அடித்துக்கொண்டு வந்து கத்தியினுல் வெட்டினுர். அதனுல் மூர்ச்சைப் பட்டு வெகு பிரயாசத்து மேலே பிழைத்தார்.

அதற்கு மேல் கேலோஜி வெங்காசிக்கு அடித்துத் துரத்தி வெகு கோபத்தி னுலே ஸம்பாஜியிடம் வந்தான். அவனும் கத்தி வாங்கிக் கொண்டு நின்ருன். இருவருக்கும் சண்டை முற்றிக்கொண்டு மதயானைக்கு மதயானை சண்டை போட்டாலெப்படியோ அவ்விதம் சண்டையாயிற்று. ஸம்பாஜியினுடைய பல அடிகளை சகித்துக்கொண்டு சாதவராஜா அந்த ஸம்பாஜியை அடித்துக் கீழே தள்ளினுர். அவனும் சொர்க்க லோகம் சேர்ந்தான். அப்போது நிஜாம்ஷாவி னுடைய சேனையும் நிர்வாகமில்லாமல் பின் வாங்கிற்று. நிஜாம்ஷா எல்லோருக்கும் ஏஜமானுயிருக்கப்பட்டவனுனபடியினுலே இருவருக்கும் சமாதானம் செய்து விலக்கி விட்டான். பின் இரணகளத்தில் கிடந்த தத்தவர்மாவையும் ஸம்பாஜியை யும் அவரவர் தம்முடைய ஊருக்கு எடுத்துக் கொண்டுபோய் பண்ணவேண்டிய கிரியா கர்மங்களை பண்ணினுர்கள். அதன் பின் அந்த சாதவராஜா நமக்கு கிட்ட உறவாய் மகா பிரபலமாயிருக்கப்பட்ட ஷாஜி ராஜாவுக்கும் நமக்கும் விரோதம் வந்ததேயென்று வெகு விசனமாய் இருந்தார்.

# நான்காம் அத்தியாயம்

இப்படியிருக்கும் பொழுது நிஜாம்ஷா விட்டல் ராஜாவினுடைய பிள்ளைகள் பேரிலுள்ள அபிமானத்தினாலே, இந்த சாதவ ராஜா மகா பிரபலன், அவனுக்கு சேனையும் நிறைய உள்ளது. நமக்கு அடங்காமலிருக்கப்பட்டவன், இப்படிப் பட்டவனை அடக்க வேண்டுமென்று மனதிலே கபடம் வைத்துக்கொண்டிருந்தார். அந்த சேதி சாதவராஜாவுக்குத் தெரிந்து டில்லி சூரான் எதல்ஷாவினுடைய [1]ஆசார் பிடிக்க வேண்டுமென்று நிஜாம்ஷாவினுடைய தேசத்தை விட்டுவிட்டு அவ்விடத் திற்குப் போனான். இவன் வந்ததைப் பார்த்து எதல்ஷாவுக்கு வெகு சந்தோஷ மாயிற்று. முன் எதல்ஷாவுக்கும் நிஜாம்ஷாவுக்கும் ஆகாமலிருந்தபடியினாலே எதல்ஷா மொகல் பாட்சாவினுடைய ஆசார் பிடித்துக்கொண்டிருந்தான். அந்த பாட்சா எதல்ஷாவினுடைய தகப்பன் இப்ராமுசா மேல் பிரீதியினாலே எதல்ஷாவி னுடைய காரியங்களெல்லாம் மனதுபடி செய்து கொடுக்கிறேனென்று பிரதிக்ஞை பண்ணினான்.

அதற்குமேல் அந்த மொகல் பாட்சா ஜஹாங்கீர் என்கிறவன் தன்னுடைய சேனையை இப்ராஹிமுக்குக் கொடுத்தான். அதனால் எதல்ஷா நிஜாம்ஷாவைத் திரணமாய் எண்ணிக் கொண்டிருந்தான். நிஜாம்ஷாவும் தன்னுடைய சேனை களோடுகூட ஷாஜி, சரபோஜி, கேலோஜி, மாலோஜி, நாகோஜி, பாலோஜி த்ரிம்பக்ஜி, கங்காஜி, மனோஜி இவர்களோடு இன்னும் துலுக்கர் அம்பீர்கான், மூசேகான் பேடர் தேசத்தரசனை சிம்மராஜா இது தவிர மராட்டியர் பலர் விட்டல்ஜி காண்ட்டே, தத்தாஜி, நரசிங்கராவ் இங்களே இது தவிர சாரத்கான், சுநப்கான், ஜோஹர்கான், அம்பீர்கான், அகமத்கான், பர்பர்கான், பரதூத்கான், பத்தேகான், ஆத்மகான், இசேகான் இப்படி மகா சூரர்களாயிருக்கிறவர்களைக் கூட்டிக்கொண்டு மற்றவர்களுக்கு பறனை பண்ணாமல் நிஜாம்ஷா இருந்தார் எதல்ஷாவும் மொகல் பாட்சாவினுடைய சகாயத்தினாலே நிஜாம்ஷாவோடு யுத்தம் செய்யவேண்டுமென்று ஜலாகான், கஜிர்கான், சிகந்தர்கான், கராமல்லாகான், கலேல்கான், இஜாமத்கான், பாதற்கான், ஸுஜான்கான் இவர்கள் துலுக்க சர்தார்கள். இதுதவிர உதார்ராம், தாதாசிராவ், விசுவனைதராவ் இன்னும் சாதவ ராஜாவினுடைய பிள்ளைகள் ஏகோஜி, அசலோஜி, ஜய்வந்த்ஜி, பகதார்ஜி இப்படிப் பட்ட சர்தார்களுடனும் மொகல் பாட்சா அனுப்பிய மகாசூரனாயிருக்கப்பட்ட லஷ்கர்கானனையும் அவனுடைய தளத்தையும் அழைத்துக் கொண்டு எதல்ஷா தெற்குப் பிராந்தியத்தையும் ஜெயிக்க வேண்டுமென்று புறப்பட்டு முஸ்தப்கான், மதூதுகான், பரீத்கான், திலாவர்கான், சஜிகான், முஸ்ஸேகான், கஹமக்கான், அம்பீர்கான், அங்குசகான், இந்த சர்தார்கள், எதல்ஷாவினுடைய தகப்பனார், இப்ரஹிம்கானுடைய சிநேகிதர்கள், இன்னும் சிறிது மராட்டிய சர்தார்களையும் முன்னே [2]அகாடியிலே அனுப்பிவைத்தான்.

---

1. கோட்டை. 2. அகாடி—முன், "முன்படை என" வந்த பொருள் போலும்.

